# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 01.09.2026

## முன்னிலை

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். NC 1312/F/2023 in SA 9307/E/2022**

திரு.இரா.இராசேந்திரன், -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொது தகவல் அலுவலர்/
தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்,
அருப்புக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
அருப்புக்கோட்டை-626 101,
விருதுநகர் மாவட்டம்.

******

## இறுதிஆணை

இவ்வாணையம் 21.07.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திருமதி.ஜெ.கோதை நாச்சியார், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், வருவாய் வட்டாட்சியர் அலுவலகம், அருப்புக்கோட்டை தாலுகா-626 101, விருதுநகர் மாவட்டம் அவர்கள் 01.09.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, மனுதாரருக்கு தகவல்கள் ந.க,ஆ4/1814/2022, சான் 27.07.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக இனம் வாரியாக தகவல்கள் ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதனை மனுதாரரும் பெற்றுக்கொண்டு ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலினையும் இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்ததை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்று, இந்த ஆணை நிறைவேற்றாமை மனுவின் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். NC 1312/F/2023 in SA 9307/E/2022</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொது தகவல் அலுவலர்/
தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்,
அருப்புக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகம்,
அருப்புக்கோட்டை-626 101,
விருதுநகர் மாவட்டம்.

**<u>மனுதாரர்:-</u>**

திரு.இரா.இராசேந்திரன்,
121ஏ, ராஜா சேதுபதி தெரு,
நீலகண்டன் கோவில் மெயின்தெரு,
பசும்பொன்நகர், பழங்காநத்தம்,
மதுரை-625 003.

Copy to: File NS/PA-